**இணைப்பு – 1**

**ஒப்பந்தப்புள்ளி கோரும் அறிவிக்கைகளில் கீழ்க்கண்ட விவரங்கள் இடம் பெற்றிருக்கவேண்டும்:**

| | | |
|---|---|---|
| 1 | ஒப்பந்தப்புள்ளிகோரும் அலுவலர் பெயர், பதவிமற்றும் முகவரி | **R. ரவிகுமார், B.E.**<br>பொதுமேலாளர்,<br>வே.மா.கூ.பா.உ.ஒன்றியம் லிட்.,<br>வேலூர்– **632 009.** |
| 2 | திட்டத்தின் பெயர் / கொள்முதல் செய்யப்படும் பணிகள் சம்பந்தமான விவரம். | வேலூர் பால் பண்ணையிலிருந்து சென்னை மாநகரத்திற்கு (TM, SM, FCM) சமன்படுத்திய பால் நிலைப்படுத்திய பால் கொழுப்பு நீக்கப்பட்ட பால் (பாக்கெட் பால்) கொண்டு செல்ல 10 மற்றும் 16 டன் கொள்ளளவுள்ள Puff Insulated Vehicle 2010 மற்றும் 2010 ம் ஆண்டிற்கு மேல் உள்ள மாடல் வாடகைக்கு வழங்குதல் |
| 3 | பணி அல்லது கொள்முதல் நடைபெறும் மாவட்டத்தின் பெயர் | வேலூர் மாவட்டம் |
| 4 | எந்த இடத்தில் எந்ததேதி மற்றும் நேரம் வரை என்ன விலைக்கு ஒப்பந்தப்புள்ளி சம்பந்தமாக படிவம் கிடைக்கும் என்ற விபரம். | ஒன்றிய தலைமை அலுவலகம், சத்துவாச்சாரி, வேலூர்–**9**<br>1) 23.05.2022 முதல் 09.06.2022 வரை காலை **11.00** மணி முதல் **4.00** மணி வரை அனைத்து அலுவலக வேலை நாட்களில்<br>**2)** ஒப்பந்த படிவத்தின் விலை ரூ.**250/–**DD ஆக (வரிகள்உட்பட) ஒரு வழிதடத்திற்கு<br>3)இணையதளம் மூலமாக இலவசமாக<br>www.tenders.tn.gov.in / aavinwebsite@gmail.com |
| 5 | செலுத்தப்பட வேண்டிய முன்வைப்புத் தொகை விவரம் | **கேட்பு வரைவோலை** (**DEMANDDRAFT**) பொது மேலாளர், வேலூர் மாவட்ட கூட்டுறவு பால் உற்பத்தியாளர்கள் ஒன்றியம் , வேலூர்-9 என்ற முகவரிக்கு எடுக்க வேண்டும். (ரொக்கமாக பெறப்பட மாட்டாது) **ரூ.5000/-** ஒரு வாகனத்திற்கு |
| 6 | பூர்த்தி செய்யப்பட்ட ஒப்பந்தப்புள்ளிகள் பெறப்படுவதற்கான கடைசி நாள், நேரம் மற்றும் இடம். | 10.06.2022 – **மாலை 2.30 மணி வரை** பொது மேலாளர் அலுவலகம், வே.மா. கூ பா.உ..ஒன்றியம், சத்துவாச்சாரி, வேலூர் - 9 |
| 7 | முன் கலந்தாய்வு கூட்டம் | பொது மேலாளர் அலுவலகம் , வே.மா. கூ.பா.உ.ஒன்றியம் சத்துவாச்சாரி , வேலூர் 02.06.2022 அன்று காலை 11.00. AM |
| 8 | பெறப்பட்டஒப்பந்தப்புள்ளி தொழில்நுட்ப படிவம் திறக்கப்படும் நாள், நேரம் மற்றும் இடம். (Technical Bid) | **10.06.2022** – மாலை **3.00 மணி** ஒன்றிய தலைமை அலுவலகம், சத்துவாச்சாரி, வேலூர்-**9** |
| 9 | ஒப்பந்தப்புள்ளி அலுவலர் பொருத்தமானது என தீர்மானிக்கும் முக்கியமான தகவல். | ஒப்பந்தப்புள்ளியுடன் வாகன பதிவுச்சான்று , காப்பீட்டு பர்மிட் நகல்கள் மற்றும் முன்வைப்பு தொகைக்கான வரைவோலை இணைக்கப்படவேண்டும். |

அலுவலரின் பெயர் : R. ரவிகுமார், B.E.
பதவி : பொது மேலாளர்
கையொப்பம் : ஒ/ம் R. ரவிகுமார்
தேதி : **19.05.2022**

| புதியது - தூயது - சுகாதாரமானது |
|---|

வேலூர் மாவட்ட கூட்டுறவு பால் உற்பத்தியாளர்கள் ஒன்றியம் லிட்.,
எண்-142, ஆற்காடு சாலை, சத்துவாச்சாரி, வேலூர்-632-009

| பால் விநியோக வழித்தடத்திற்கு வாடகைக்கு PUF INSULATED வாகனத்தை வழங்குதல் (MILK DISTRIBUTION ROUTE PUF INSULATED VEHICLE) தொழில்நுட்ப படிவம் – A (Technical Bid) |
|---|

டெண்டர் நாள் : 10.06.2022

இப்படிவம் திரு /திருமதி ____________________ அவர்களுக்கு

வழங்கப்பட்டுள்ளது

**வரைவோலை எண்:** **நாள்** :

**வேலூர் மாவட்ட கூட்டுறவு பால் உற்பத்தி ஒன்றியத்தில் பால் விநியோக வழித்தடத்திற்கு பப்டு வாகனம் (PUF INSULATED VEHICLE) இயக்குதல் பணிக்கான ஒப்பந்த அட்டவணை**

அனுப்புதல்,

பெறுதல்,
பொதுமேலாளர் அவர்கள்,
**வேலூர்** மாவட்ட கூட்டுறவு பால் உற்பத்தியாளர்கள் ஒன்றியம் லிட்,
**சத்துவாச்சாரி**

**வேலூர் -9**

அய்யா,

1. இத்துடன் இணைக்கப்பட்டுள்ள ஒப்பந்த படிவத்தின் அனைத்து பகுதிகளும் முழுமையாக என்னால் பூர்த்தி செய்யப்பட்டுள்ளது.
2. தங்களிடமிருந்து ஒப்பந்த நியமன உத்திரவு வழங்கும் பட்சத்தில் உடனடியாக அனைத்து ஆவணங்களும் அதாவது காப்புத்தொகை செலுத்துதல், முத்திரைத்தாளில் ஒப்பந்தம் சமர்பித்தல், தங்கள் ஒப்பந்தத்தை ஏற்றுக்கொள்வது இவ்வொன்றியத்தில் **இணை** உறுப்பினராகுதல் தொடர்பான அனைத்து நடவடிக்கைகளையும் உடனடியாக செய்கிறேன் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேகிறேன்.
3. ஒப்பந்தப் படிவத்தில் தெரிவிக்கப்பட்டுள்ள அனைத்து **விவரங்களும்**என்னால் முழுமையாக படித்து அறியப்பட்டு அதை ஏற்றுக்கொள்கிறேன் என சான்று செய்கிறேன்.
4. ஒப்பந்தம் தொடர்பாக பொது மேலாளர்,**வேலூர்** ஒன்றியம் அவர்களால் எடுக்கப்படும் அனைத்து முடிவுகளுக்கும் நான் கட்டுப்படுவேன்.
5. **டெண்டர் தொழில் நுட்ப படிவம்பக்கம்** 01 முதல் 18 பக்கங்கள் **மற்றும் வணிக விலைப்புள்ளி படிவம் 2 பக்கங்கள்** உரிய ஒப்பந்தப்படிவம் என்னால் கையொப்பமிட்டு இத்துடன் இணைத்துள்ளேன்.
6. பொதுமேலாளர் அவர்களுக்கு எவ்வித முன்னறிவிப்புமின்றி ஒப்பந்த விதிமுறைகளை ஏற்றுக்கொள்ளவோ, மறுக்கவோ, திருத்தயமைக்கவோ ஒப்பந்த காலத்தை ஒத்திவைக்கவோ, தள்ளுபடி செய்யவோ முழு அதிகாரம் உண்டு என்பதை நான் அறிவேன்.
7. ஒப்பந்த தொழில்நுட்ப பகுதியில் முன்வைப்புத் தொகையை இணைத்து முழுமையாக பூர்த்தி செய்து கையொப்பமிட்டு அனைத்து ஆவணங்களுடன் ஒரு தனி கவரில் போட்டு அரக்கு சீல் வைத்தும், வணிக நுட்பபுள்ளியை முழுமையாக பூர்த்தி செய்து கையொப்பமிட்டு ஒரு தனிகவரில் போட்டு அரக்கு சீல் வைத்தும் இந்த இரண்டு சீல் வைக்கப்பட்ட கவர்களை வேறொரு கவரில் போட்டு அரக்கு சீல் வைத்து எனது முழு முகவரியுடன் ஒவ்வொரு கவரின் மேல் பகுதியில் **வேலூர்** மாவட்டத்தின் ………. வழித்தட பால் விநியோக ஒப்பந்தம் என குறிப்பிட்டு பொது மேலாளர்,**வேலூர்** மாவட்ட கூட்டுறவு பால் உற்பத்தியாளர்கள் ஒன்றியத்திற்கு சமர்பிக்கிறேன்.

இடம்:
நாள்:

டெண்டர்தாரர் கையொப்பம்

# SCHEDULE “A”

## வேலூர் மாவட்ட கூட்டுறவு பால் உற்பத்தியாளர்கள் ஒன்றியம் லிட் ,

## எண்.142 ஆற்காடு சாலை ,சத்துவாச்சாரி ,வேலூர்-632009

வேலூர் மாவட்ட கூட்டுறவு பால் உற்பத்தியாளர்கள் ஒன்றியத்தில் வேலூர் பால் பண்ணையிலிருந்து சென்னைக்கு தேவையான நாட்களில் பேக்கெட் பால் கொண்டு செல்ல ஒப்பந்தம் வழங்கும் நாள் முதல் ஓராண்டிற்கு பப்டு (**Puff Insulated Vehicle)** வாகனம் மூலம் பால் விநியோகம் செய்வதற்கான ஒப்பந்தப்புள்ளி படிவம்.

## தொழில்நுட்ப தகவல் விண்ணப்பம் (TECHNICAL BID)

| | | |
|---|---|---|
| 01 | பால் விநியோக வழித்தடத்தின் பெயர் | வேலூர் முதல் சென்னை |
| 1 | விண்ணப்பதாரரின் பாஸ் போர்ட் அளவு போட்டோ ஒட்டப்பட வேண்டும் | |
| 02 | விண்ணப்பதாரரின் பெயர் மற்றும் நிரந்தர முகவரி | |
| 03 | தொலை பேசி - செல்போன் எண் | |
| 04 | பப்டு வாகனத்தின் பதிவு எண் **(Puff Insulated Vehicle)** | |
| 05 | பப்டு **(Puff Insulated Vehicle)** வாகனம் கொள்ளளவு மற்றும் உற்பத்தி செய்யப்பட்ட ஆண்டு | |
| 06 | பப்டு **(Puff Insulated Vehicle)** வாகனம் எந்த தேதியில் ப.்.ப்டு செய்யப்பட்டது தொடர்பான (Body Builders Certificate) சான்றிதழ் உள்ளதா?<br>வட்டார போக்குவரத்து அலுவலகத்தில் ப.்.ப்டு வாகனம் என பதிவு செய்யப்பட்ட சான்று இணைக்கப்பட்டுள்ளதா? | |

டெண்டர்தாரர் கையொப்பம்

| | | |
|---|---|---|
| 07 | வாகனத்திற்கு எப்.சி. (F.C.) உரிமம் எந்தத் தேதி வரை உள்ளது? | |
| 08 | வாகனத்திற்கு எந்த தேதி வரை வரி செலுத்தப்பட்டுள்ளது? | |
| 09 | வாகனத்திற்கு எந்த தேதி வரை காப்பீடு செய்யப்பட்டு உள்ளது? (Insurance Coverage) | |
| 10 | வாகனத்திற்கு எந்த தேதி வரை உரிமம் (Permit) உள்ளது? | |
| 12 | டேவணித் தொகை (EMD) செலுத்தியதற்கான விபரம் (கேட்பு வரைவோலை (DD) எண் மற்றும் நாள்) | |
| 13 | PAN No./AdharNo | |

என்னால் / எங்களால் கொடுக்கப்பட்டுள்ள மேற்குறிப்பிட்ட விபரங்கள் யாவும் உண்மையானவை என உறுதி கூறுகின்றேன்.'. உறுதி கூறுகின்றோம்.

இடம் :

நாள் :

டெண்டர்தாரர் கையொப்பம்

**2022-2023 வரையிலான ஒரு ஆண்டுக்கு ஒளிவுமறைவற்ற ஒப்பந்த விதிமுறைகளின்படி ஒப்பந்தத்தில் கோர உள்ள பால் விநியோக வழித்தடங்களின் விவரம்.**

| வரிசை எண் | பால் விநியோக வழித்தடங்களின் விவரம் | ஒப்பந்தம் கோரும் வாகனத்தின் தன்மை | ஒப்பந்தம் கோரும் வாகன கொள்ளளவு | வாகனம் இயக்கப்படும் தூரம் நாளொன்றுக்கு கிலோ மீட்டர் |
|---|---|---|---|---|
| 1. | வேலூர் பால் பண்ணையிலிருந்து சென்னை, (TM, SM, FCM) சமன்படுத்திய பால் நிலைப்படுத்திய பால் கொழுப்பு நீக்கப்பட்ட பால் (பாக்கெட் பால்) கொண்டு செல்லுதல் | **(Puff Insulated Vehicle)** | 10 மற்றும் 16 டன் கொள்ளளவுள்ள Puff Insulated Vehicle வசதி கொண்ட 2010-ம் ஆண்டு மற்றும் அதற்கு மேல் உள்ள மாடல் | 252 கிமீ. |

**வே.மா.கூ.பால்.உ.ஒன்றியத்திற்காக,**

**பொது மேலாளர்**

**வேலூர் மாவட்ட கூட்டுறவு பால் உற்பத்தியாளர்கள் ஒன்றியத்தின் பால் விநியோக வழித்தட ஒப்பந்த வாகனங்களுக்கான 2022–2023 வரையிலான ஓராண்டுக்கு ஒப்பந்த விதிகளும் நிபந்தனைகளும் பின்வருமாறு**

1. **ஒப்பந்தம் கோரப்படும் வண்டிகளின் மாடல் 2010 மற்றும் அதற்கு மேல் இருக்க வேண்டும். இந்த ஒப்பந்தத்தில் சேர்க்கப்பட்ட வண்டியை, வேறு எந்த ஒப்பந்தத்திலும் சேர்க்கக் கூடாது. வண்டியின் ஆர்.சி. புக் ஒப்பந்ததாரர் பெயரில் இருந்தால் மட்டும் ஒப்பந்தத்தில் கலந்து கொள்ள அனுமதிக்கப்படுவார்.**
2. ஒப்பந்ததாரர் ஏற்கெனவே ஒப்பந்தத்தில் மற்ற ஆவின் ஒன்றியங்கள் /இதர நிறுவனங்களில் இயக்குகின்ற வாகனங்கள் ஒப்பந்தத்தில் குறிப்பிடக்கூடாது .அவ்வாறு வேறு ஒப்பந்தத்தில் ஏற்கெனவே இயக்க ஒப்பந்தம் செய்யப்பட்டதாக பின்னர் தெரியவந்தால் ஒப்பந்தம் முன்னறிவிப்பின்றி ரத்து செய்யப்படுவதுடன் முன் வைப்பு தொகை /பிணை வைப்பு தொகை அனைத்தும் பறிமுதல் செய்யப்படும் .
3. இவ்வொன்றியம் மற்ற ஆவின் ஒன்றியங்கள் /இணையத்தில் கருப்பு பட்டியல் ( BLACKLIST)-இல் உள்ளவர்கள் ஒப்பந்தத்தில் கலந்து கொள்ளக்கூடாது அவ்வாறு கருப்பு பட்டியலில் உள்ளவர்கள் ஒப்பந்தம் செய்யப்பட்டதாக பின்னர்தெரியவந்தால் ஒப்பந்தம் முன்னறிவிப்பின்றி ரத்து செய்யப்படுவதுடன் முன் வைப்பு தொகை /பிணை வைப்பு தொகை அனைத்தும் பறிமுதல் செய்யப்படும்.
4. *ஒப்பந்தபுள்ளி கோருபவர் தங்களுடைய வருமான வரி நிரந்தர கணக்கு எண்* (PAN Number)*நகல் உணவு பொருள் வழங்கல் துறை குடும்ப அட்டை நகல் /ஆதார் அட்டை நகல் ஆகியவற்றை ஒப்பந்த படிவத்துடன் இணைத்து சமர்பிக்க வேண்டும் .*
5. ஒப்பந்தப்புள்ளியானது தொழில்நுட்ப பகுதி மற்றும் வணிகநுட்ப பகுதி என இரு பகுதிகளாக அடங்கும். ஒவ்வொரு பக்கத்திலும் கையொப்பமிட்டு கவரின் மேல் தொழில்நுட்ப பகுதி மற்றும் வணிகநுட்ப பகுதி என எழுதி முழுமையாக தனித்தனி உறைகளிலிட்டு, மூடி முத்திரையிட்டு பின்பு அவைகளை பெரிய உறையிலிட்டு மூடி முத்திரையிட்டு அதன் மேல் கலந்து கொள்ளும் வழித் தடத்தின் பெயர் எழுதப்பட்டு சமர்ப்பிக்கப்பட வேண்டும்.
6. ஒப்பந்த காலம் ஒப்பந்த ஆணை வழங்கும் நாள் முதல் ஒரு ஆண்டுகாலம் ஆகும். ஒப்பந்த காலம் காலாவதியான பின்பும் தேவைப்படும் பட்சத்தில் ஒப்பந்த காலத்தை மேலும் மூன்று மாதங்கள் அல்லது மறு ஒப்பந்தம் இறுதி செய்யும் காலம் வரை இதில் எது முந்தையதோ அது வரை நீட்டிக்க ஒன்றியத்திற்கு அதிகாரம் உண்டு.
7. ஒப்பந்ததாரர் பகல் மற்றும் இரவு நேரங்களில் ஒன்றியத்திலிருந்து ஆவின் முகவர்களுக்குத் தேவையான பால் மற்றும் பால் பொருட்களை ஒன்றியத்தால் நிர்ணயம் செய்யப்பட்டுள்ள கால வரையறைக்குள் ஒன்றியம் நிர்ணயம் செய்யும் வழித்தடத்தில் கொண்டு சேர்க்க வேண்டும்.

டெண்டர்தாரர் கையொப்பம்.

8. ஒப்பந்தத்தில் கலந்து கொள்பவர்கள் ஒவ்வொரு வாகனத்திற்கும் தனித்தனியே ரூ.5000 முன்வைப்புத் தொகையாக (EMD) வேலூரில் பணம் பெறக்கூடிய வகையில் வங்கி டிமாண்ட் டிராப்ட்-ஐ “ The General Manager, Vellore District Co-operative Milk Producers' Union Ltd, Vellore-9”என்ற பெயரில் எடுத்து தொழில்நுட்ப பகுதியுடன் இணைத்து, வாகன எண் குறிப்பிட்டு அனுப்பப்பட வேண்டும். ஒவ்வொரு வழித்தடத்திற்கும் தனித்தனியாக டெண்டர் சமர்பிக்கவேண்டும். ஒன்றுக்கு மேற்பட்ட டெண்டர்களை ஒரே கவரில் வைத்து சமர்பித்தால் அவை ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது. EMD தொகை DD ஆக மட்டுமே செலுத்தப்பட வேண்டும். ரொக்கமாக பெறப்படமாட்டாது . ஒப்பந்தப் புள்ளிகளை நேரில் பொது மேலாளர் , வேலூர் மாவட்ட பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவு ஒன்றியம் , சத்துவாச்சாரி அலுவலகத்தில் சமர்பிக்கவேண்டும்.

9. ஒப்பந்ததாரர் செலுத்த வேண்டிய பிணை வைப்பு தொகை ஒரு வாகனத்திற்கு ரூ.30,000/-(ரூபாய். முப்பதாயிரம் மட்டும்) ஆகும். ஒப்பந்த ஆணை கிடைக்கப் பெற்றவுடன் ஒவ்வொரு வாகனத்திற்கும் தனித்தனியே பிணை வைப்பு தொகை செலுத்திட வேண்டும் . ஒப்பந்த படிவத்துடன் ஒரு வாகனத்திற்கு ரூ.**5000**/- முன்வைப்பு தொகையும் , மீதியுள்ள தொகை **ரூ.25,000/-**யை ஒப்பந்த ஆணை கிடைக்கப்பெற்ற 15 தினங்களுக்குள் வேலூரில் பணம் பெறக்கூடிய வகையில் கேட்பு ஓலையாக ( DD)“ The General Manager, Vellore District Co-operative Milk Producers' Union Ltd, Vellore-9 என்ற பெயரில் எடுத்து ஒன்றியத்தில் செலுத்தி ஒப்பந்தம் செய்து கொள்ள வேண்டும். ஒப்பந்ததாரர் செலுத்தும் வைப்பு தொகைக்கு எவ்வித வட்டியும் வழங்கப்படமாட்டாது .

10. ஒப்பந்ததாரர் வாகனத்தில் பணிப்புரியும் ஊழியர்கள் பற்றிய விவரங்களை அவர்களது புகைப்படத்துடன் , ஒப்பந்தம் பெற்ற நாளிலிருந்து 15 நாட்களுக்குள் ஒன்றியத்திற்கு வழங்கவேண்டும்.

11. ஒப்பந்த வாகனத்தில் பணிபுரியும் ஓட்டுனர் மற்றும் உதவியாளர் , வாகனம் இயக்கும்போது புகைபிடித்தல் மற்றும் மது அருந்துதல் போன்ற ஒழுங்கீன செயல்கள் ஒன்றியத்தின் கவனத்திற்கு வரும்போது கடும் நடவடிக்கை எடுக்கப்படும் .

12. ஒப்பந்ததாரர் ஒப்பந்தம் வழங்கப்பட்ட 15 தினங்களுக்குள் ஒப்பந்த விதிகளை முழுமையாக ஏற்றுக்கொண்டமைக்கு அத்தாட்சியாக ரூ .100 /- மதிப்பிற்கான முத்திரைதாளில் ஒப்பந்த விதிகளைதட்டச்சு செய்து ஒவ்வொரு தாளிலும் கையொப்பம் இட்டு, இவ்வொன்றியத்துடன் ஒப்பந்தம் செய்து கொள்ள வேண்டும். ஒப்பந்ததாரர் ஒப்பந்த பத்திரம் வழங்கிய பின்னரே போக்குவரத்து கட்டணம் விடுவிக்கப்படும் .

டெண்டர்தாரர் கையொப்பம்

13. ஒப்பந்தம் கிடைத்த ஒப்பந்ததாரர் ஒன்றிய விதிகளின்படி ரூ.11/- (ரூபாய் *பதினொன்று* மட்டும்) செலுத்தி ஒன்றியத்தில் இணை உறுப்பினராக பதிவு செய்து கொள்ள வேண்டும். இத் தொகை திருப்பி வழங்கப்பட மாட்டாது. இவ்வொன்றிய தேர்தலில் வாக்களிக்கவோ அல்லது ஒன்றிய லாபத்தில் பங்கு பெறவோ ஒப்பந்ததாரருக்கு எவ்வித உரிமையும் இல்லை.

14. *ஒப்பந்ததாரர்* ஒப்பந்தம் இறுதி செய்யப்பட்ட பத்து தினங்களுக்குள் ஒப்பந்தத்தில் குறிப்பிட்டுள்ள வாகனத்தை ஒன்றிய அலுவலர்கள் முன் ஆய்வுக்கு உட்படுத்த வேண்டும்.

15. *பாலின் குளிர்வுத்தன்மை குறையாத வண்ணம்* Poly Urethene Foam (PUF) *இன்சுலேஷன் 80* mm *தடிமானம் அளவு (*Specification) *உடையதாக பூர்த்தி செய்யத்தக்கதாக இருக்க வேண்டும்.*

16. பப்டு (**Puff Insulated Vehicle**) வாகனத்தின் குளிர் நிலைத்தன்மை பால் பாக்கெட்டுகள் ஏற்றிய பிறகு ஆறுமணி நேரத்திற்கு 2’C-க்கு மேல் வெப்பநிலை அதிகமாகாமல் இருக்க வேண்டும். உதாரணமாக, பால் பாக்கெட்டுகள் ஏற்றும் போது வெப்ப நிலை 4 ˙C இருந்தால், ஆறு மணி நேரத்திற்கு பிறகு வெப்ப நிலை 6’C -க்குள் தான் இருக்க வேண்டும். தவறும் போது வாகனத்தின் தன்மையை ஒரு வார காலத்திற்குள் மாற்றி உரிய தரத்தில் வாகனத்தை இயக்க சமர்ப்பிக்க வேண்டியது ஒப்பந்ததாரரின் பொறுப்பாகும் தவறும்பட்சத்தில் நாள் ஒன்றுக்கு ரூ.1,000/- அபராதமாக விதிக்கப்படும். இது சம்பந்தமாக ஒன்றிய தரக்கட்டுப்பாடு அலுவலர் அவர்களின் முடிவே இறுதியானது ஆகும்.

17. இந்த ஒப்பந்தம், ஒன்றியத்தின் பால் விநியோக வண்டிகளின் நிலைமை திருப்திகரமாக இல்லாது இருப்பின் அல்லது பால் விநியோகம் செய்யும் வண்டிகள் தேவையில்லை எனக் கருதும்போது ஒரு மாத கால நோட்டீஸ் கொடுத்து ஒப்பந்தம் ரத்து செய்யப்படும்.

18. ஒப்பந்த காலத்தில் பால் விநியோக வழித்தட *தூரத்தை* அல்லது வழித்தடத்தினை மாற்றி அமைக்கவோ, தடத்தின் தூரத்தைக் கூட்டவோ, குறைக்கவோ இவ்வொன்றியத்திற்கு முழு உரிமை உண்டு. மாறுதல் குறித்து விபரம் கிடைத்தவுடன் ஆணைக்கு இணங்க ஒப்பந்ததாரர் வண்டி ஓட்டுதல் வேண்டும்.

டெண்டர்தாரர் கையொப்பம்

19. வாகனத்திற்கு நிர்ணயம் செய்யப்பட்ட கொள்ளளவு உள்ள அளவிற்கு பால் டப்புகள் மற்றும் ஒன்றியத்தில் அனுப்பப்படும் *பால் மற்றும் பால் உப* பொருட்களை வண்டியில் ஏற்றிச் செல்ல வேண்டும். ஒப்பந்தம் பெற்ற ஒப்பந்ததாரரிடம் அவ்வழித்தடத்திற்கு தேவையான பால் டப்புகள் ஒப்படைக்கப்படும். ஒப்பந்தம் முடிவுறும் தருவாயில் ஒன்றியத்தின்*விற்பனை* பிரிவுக்கு பெறப்பட்ட பால் டப்புகளை திரும்ப ஒப்படைக்க வேண்டும். **ஏதேனும் குறைவு ஏற்படின் அன்**றைய சந்தை மதிப்பில் தொகைபிடித்தம் செய்வதுடன் ரூ.1000/- ம் அபராதம் விதிக்கப்படும்.

20. *ஒப்பந்ததாரர் ஒப்பந்தத்தில் கலந்து கொள்ளும் வாகனம் எந்த ஒரு ஒன்றியத்திலோ அல்லது அரசு நிறுவனத்திலோ* ஒப்பந்தம் ஒப்புக் கொள்ளப்பட்டு அது முடிவுறும் காலமோ அல்லது மறுஒப்பந்தம் விடப்பட்டு ஆணை பிறப்பிக்கும் காலத்திற்கு முன்போ, ஒப்பந்ததாரரே வண்டியை நிறுத்திக் கொண்டால் அவர் தனது காப்புத் தொகையை இழப்பதோடு ஒப்பந்ததாரர் எந்த “ஆவின் நிறுவனங்களிலும் ஒப்பந்தத்தில் கலந்துகொள்ள தகுதி அற்றவர்” என முடிவு செய்யப்படும்

21. ஒரே ஒப்பந்ததாரர், ஒன்றுக்கு மேற்பட்ட தடங்களில் ஒப்பந்ததாரர்களாக ஏற்கப்பட்டு பால்பாக்கெட் ஏற்றிச் செல்லும் தடத்தில் எந்த தடத்திலாவது இழப்பு ஏற்படுமாயின் அத்தடத்தின் இழப்பை ஈடுகட்ட இயலாத நிலையில் அந்த ஒப்பந்ததாரர் ஒன்றியத்தின் வேறு **தடங்களில்** வண்டி இயக்கி வந்தால் அதில் பெறப்படும் வாடகை மற்றும் காப்புத் தொகையிலிருந்து இந்த இழப்பினை ஈடுசெய்ய ஒன்றியத்திற்கு உரிமை உண்டு.

22. ஒப்பந்தம் ஒப்புக்கொள்ளப்பட்ட ஒப்பந்ததாரர், ஒரு வார காலத்திற்குள் ஒன்றியம் குறிப்பிடும் வங்கியில் கணக்கு ஆரம்பித்து, அதற்கான கணக்கு எண்ணை இவ்வொன்றியத்திற்கு தெரிவிக்க வேண்டும். 15 நாட்களுக்கு ஒரு முறை வழங்கும் வாடகைத் தொகை வங்கியில் இருசால் செய்யப்படும். வாடகைத் தொகையை வங்கி கணக்கின் மூலமே பெற்றுக் கொள்ள வேண்டும். வாடகை பட்டியல்கள் பிரதிமாதம் 5ம் தேதியும், 20-ம் தேதிக்குள் சமர்ப்பிக்க வேண்டும். காலதாமதமாக வரும் பட்டியல்களின் நிலுவைக்கு ஒன்றியம் பொறுப்பேற்காது.

23. பால் விநியோகம் செய்யும் பப்டு (**Puff Insulated Vehicle**) வண்டியின் மேல் பாகம், பக்கவாட்டு பகுதிகள் தினசரி தண்ணீரால் கழுவப்பட்டு, உட்புறம் சுத்தமாக வைத்திருக்க வேண்டும். அங்கீகரிக்கப்பட்ட ஒப்பந்த வாகனத்தின் முகப்பில் “ஆவின்,*வேலூர்* ஒப்பந்த வண்டி”(On Contract with Aavin, Vellore) என்ற பெயர் வெள்ளை மற்றும் நீல நிறத்தில் எழுதப்பட்டிருக்க வேண்டும். மேலும் ஒன்றியம் கோரும் விளம்பரத்தை*வாகனத்தின் இரு பக்கங்களில்* எழுத வேண்டும்.

டெண்டர்தாரர் கையொப்பம்

24. *ஒப்பந்ததாரர் வாகனத்தில் பால் ஏற்றவோ அல்லது இறக்கவோ இடையூறு இல்லாமல் இருக்கும் வகையில் வாகனத்தின் உட்புறம் உரிய விளக்குகள் பொருத்தப்பட்டிருக்க வேண்டும்.*
25. பால்பண்ணையிலிருந்து பால் கேன்/டப்புகள் மற்றும் காலி டப்புகள் கேன்களை வண்டியில் ஏற்றவும், இறக்கவும் தனது சொந்த செலவில் நபர்களை ஒப்பந்ததாரர் நியமித்துக் கொள்ள வேண்டும். மேலும் பால்கேன்கள் டப்புகள், காலி கேன்கள் டப்புகள் போன்றவற்றை மிகவும் பாதுகாப்பான முறையில் கையாளப்பட வேண்டும். கவனக்குறைவால் பாலுக்கோ, பால் டப்புகளுக்கோ சேதாரம் ஏற்பட்டாலும், பால் டப்புகளின் எண்ணிக்கைகள் குறைவு ஏற்பட்டாலும் அதற்கான முழுத் தொகையினை ஒப்பந்ததாரரின் வாடகைப் பட்டியலில் இருந்து பிடித்தம் செய்யப்படும்.
26. ஒப்பந்த வண்டியின் கடைசி வாடகைப் பட்டியலை ஒப்பந்ததாரர் ஒப்பந்தகாலம் முடிந்தவுடன், தங்கள் பால் விநியோக வழித்தடத்தில் உள்ள முகவர்.:. பால் நுகர்வோர் கூட்டுறவு சங்கங்களிடமிருந்து "வரவேண்டிய இனங்கள் ஏதும் இல்லை" என்ற சான்றுடன் 30 நாட்களுக்குள் விற்பனைப் பிரிவு அலுவலகத்தில் சமர்ப்பிக்கப்பட வேண்டும். அவ்வாறான சான்றுடன் சமர்ப்பிக்கப்பட்ட பின்பு மட்டுமே வண்டியின் கடைசி வாடகை பட்டியல் அனுமதிக்கப்பட்டு, தொகை வழங்கப்படும்.

27. ஒப்பந்தம் ஒப்புக் கொள்ளப்பட்டு அது முடிவுறும் காலமோ அல்லது மறுஒப்பந்தம் விடப்பட்டு ஆணை பிறப்பிக்கும் காலத்திற்கு முன்போ, ஒப்பந்ததாரரே வண்டியை நிறுத்திக் கொண்டால் அவர் தனது காப்புத் தொகையை இழப்பதோடு ஒப்பந்ததாரர் எந்த "ஆவின் நிறுவனங்களிலும் ஒப்பந்தத்தில் கலந்துகொள்ள தகுதி அற்றவர்" என முடிவு செய்யப்படும்.
28. வேலை நிறுத்தம், பந்த் மற்றும் இதர எதிர்பாராத சூழ்நிலைகளினால் போக்குவரத்து தடைபட்டால், பால் விநியோகத்திற்கு மாற்று வழிகளை கடைப்பிடித்து தம்முடைய சொந்தப் பொறுப்பில் பால் விநியோகம் செய்து தர வேண்டியது ஒப்பந்ததாரரின் கடமையாகும். மேலும் ஏதேனும் விபத்து ஏற்படின் பால் மற்றும் பால் உபபொருட்களுக்கு சேதாரம் அல்லது கெட்டு போனால் அதனால் ஏற்படும் இழப்புக்கு ஒப்பந்ததாரரே பொறுப்பாவார். மேலும் நாளொன்றுக்கு ரூ.1000/- அபராதம் விதிக்கப்படும்.
29. எதிர்பாராத விதமாக வண்டி பழுதடைந்து விட்டால், மாற்று ஏற்பாடு செய்து உரிய காலத்தில் பாலைபூத்துகளில் நிறுவனங்களில் *பால்* ஒப்படைக்க வேண்டியது ஒப்பந்ததாரரின் பொறுப்பாகும்.
30. பால் விநியோக வாகனம் ஓட்டும்போது கிளீனருடன் தான் வண்டியை இயக்க வேண்டும். பால் டப்புகள், கேன்கள் வண்டி ஓட்டும்போது சாய்ந்து விடாமல் பாதுகாப்பாக கவனித்துக் கொள்ள வேண்டியது அவரது பொறுப்பாகும். ஒன்றியத்தின் அலுவலர்கள், முகவர்கள் மற்றும் சிப்பந்திகளிடம் வண்டியின் ஓட்டுநர் மற்றும் கிளீனர் நாகரிகமாகவும், மரியாதையாகவும் நடந்து கொள்ள வேண்டும். அவர்களது நடத்தை சரியில்லை எனத் தெரியவந்தால் குறிப்பிட்ட நபர்களை பால் விநியோக வண்டியில் செல்ல அனுமதிக்கக் கூடாது என உத்திரவிட ஒன்றியத்திற்கு உரிமையுண்டு. ஒன்றிய உத்திரவிற்கு கட்டுப்பட்டு பணியாளர்களை மாற்றி அமர்த்த ஒப்பந்ததாரர் கடமைப்பட்டவராவார்.

டெண்டர்தாரர் கையொப்பம்

31. சுங்கச் சாவடிகளில் வசூலிக்கப்படும் சுங்க வரிக்கு ஒப்பந்ததாரரே முழுப் பொறுப்பு ஆவார். *சுங்க வரி தனியாக வழங்கப்படமாட்டாது*.

32. ஒப்பந்ததாரர் நாள்தோறும் எடுத்துச்செல்லும் பால் டப்புகளை அடுத்த நாள் தவறாமல் எடுத்துவர வேண்டும். எண்ணிக்கையில் ஏதேனும் குறைவு ஏற்பட்டால் பால் டப்பு ஒன்றுக்கு அபராதமாக ரூ.100/- நாளொன்றுக்கு பிடித்தம் செய்யப்படும்.

33. ஒப்பந்தம் திறக்கும் நாளிலிருந்து அதன் ஒப்பந்தம் முடியும் வரையில் அரசால் டீசல் விலை உயர்த்தப்பட்டாலோ அல்லது குறைக்கப்பட்டாலோ, கிலோமீட்டருக்கு விகிதாச்சார அடிப்படையில் விலை உயர்வு அல்லது குறைவு செய்யப்படும்.

34. ஒப்பந்தம் பெற்று பால் விநியோக வண்டிகள் இயங்கி வரும் நிலையில் ஒப்பந்த வண்டிகள் பழுதடைந்து விட்டாலோ அல்லது எதிர்பாராத விபத்து போன்ற தவிர்க்க முடியாத சூழ்நிலையில் ஒப்பந்ததாரர் தங்கள் பெயரில் உள்ள மாற்று வண்டியை ஒன்றிய அனுமதி பெற்று பால் விநியோக வழித் தடத்தில் நிரந்தர மாற்றுவண்டியாக இயக்கிக் கொள்ளலாம். அவ்வாறான நிரந்தர மாற்று வண்டியானது கொள்ளளவு, தரம் (Specification) ஆக இருக்க வேண்டும். மேலும் நிரந்தர மாற்று வண்டி கட்டணமாக ரூ.1,000/- (ரூபாய் ஆயிரம் மட்டும்) ஒப்பந்ததாரரால் செலுத்தப்பட வேண்டும். ஒன்றிய அனுமதி பெறாமல், ஒப்பந்த வாகனம் இன்றி தொடர்ந்து மாற்று வண்டி இயக்கி வந்தால் 15 நாட்களுக்கு மேல் 30 நாட்களுக்குள் நாளொன்றுக்கு ரூ.500/- அபராதம் விதிக்கப்படும். அதன்பின்னரும் தொடர்ந்து மாற்று வாகனம் இயக்கி வந்தால், எவ்வித முன்னறிவிப்புமின்றி ஒப்பந்தம் ரத்து செய்யப்படும்.

35. **மோட்டார் வாகனச் சட்டப்படி வாகனத்தின் பதிவு எண் சான்றிதழில் பட்டு/மூடிய வாகனம் பதியப்பட்டு இருக்க வேண்டும்.** வாகனம் முழுக் காப்பீடு செய்யப்பட்டிருக்க வேண்டும். மோட்டார் வாகனச் சட்டப்படி ஒப்பந்த வாகனத்தின் சாலை வரி செலுத்துவது, ஒப்பந்த வண்டிகளில் பணிபுரியும் ஊழியர்களுக்கு இன்சூரன்ஸ், வருங்கால வைப்புநிதி போன்றவற்றில் சட்டப்பூர்வமான விதிகளை கடைப்பிடித்து ஒப்பந்ததாரர்களே செலுத்தி, அதற்குரிய சலான் நகல்களை ஒன்றியத்திற்கு பிரதி மாதம் கொடுக்கவேண்டும்.*ஒப்பந்ததாரர்* பால் விநியோக வழித்தடங்களில் ஏற்படும் விபத்துகளுக்கும், அதனால் ஏற்படும் அனைத்து விதமான இழப்புகளுக்கும் பால் விநியோக வண்டி ஒப்பந்ததாரர்களே முழு பொறுப்பு ஏற்றுக் கொள்ள வேண்டும். இது சம்பந்தமாக ஒன்றியம் எவ்வகையிலும் பொறுப்பேற்காது.

36. ஒன்றியத்தின் பால் மற்றும் பால் உபபொருட்கள் அல்லது அதிகாரிகளால் அனுமதிக்கப்பட்ட பொருட்கள் தவிர வேறு பொருட்களை ஏற்றி வரக்கூடாது. தவறினால் ஒப்பந்தம் உடனடியாக ரத்து செய்யப்படுவதுடன் அவரது பில் மற்றும் *பிணை வைப்பு* தொகை முழுவதும் பறிமுதல் செய்யப்படும்.

டெண்டர்தாரர் கையொப்பம்

37. ஒப்பந்ததாரர் ஒப்பந்த வாகனத்தை ஒன்றியத்தின் அனுமதியின்றி திடீரென்று வாபஸ்பெற்றாலும்அல்லதுநிறுத்திவிட்டாலும்அல்லதுமுறைகேடுகளில்ஈடு பட்டுஒன்றியவிதிமுறைகளின்கீழ்ரத்துசெய்யப்பட்டாலும் பிணை வைப்பு தொகை முழுவதும் முடக்கி வைப்பதுடன் , ஒப்பந்ததாரர் பெயர் கருப்பு பட்டியலில் வைக்கப்படும் மேலும் கடைசி 15 நாள் போக்குவரத்து கட்டணம் விடுவிக்கப்பட மாட்டாது.

38. பிணை வைப்பு தொகையைவிட அதிகமான தொகை ஒப்பந்ததாரரிடமிருந்து வசூலிக்கப்பட வேண்டிய நிலை ஏற்பட்டால், அவற்றை ஈடுகட்ட வேண்டியது ஒப்பந்ததாரரின் பொறுப்பு ஆகும். தவறும் பட்சத்தில் ஒப்பந்ததாரரின் இதர சொத்துக்களிலிருந்து வசூல் செய்ய ஒன்றியத்திற்கு உரிமை உண்டு.

39. ஒப்பந்த வாகனத்தில் ஒப்பந்ததாரரோ அல்லது அவரின் ஊழியர்களோ பால் ஏற்றி வரும்போது தேவைப்பட்டியலுக்கு அதிகமாக பால் ஏற்றி வந்தாலோ, பால் பூத்துகளில் கேட்பு பட்டியலைவிட குறைவாக விநியோகம் செய்தாலோ பால் திருடினாலோ அல்லது வேறு வகையில் முறைகேடுகள் செய்தாலோ கீழ்க்கண்டவாறு அபராதம் விதிக்கப்படும் .

1) 10 லிட்டர் வரை --- ரூ.2500/-

2) 10 லிட்டருக்கு மேல் 25 லிட்டர் வரை --- ரூ .5000/-

3) 25 லிட்டருக்கு மேல் --- ரூ .10000/-

அ)ஒப்பந்ததாரர் பால் தேவைப்பட்டியலைவிட வாகனத்தில் பால் டப்புகளில் பால் அதிகமாக இருப்பது மூன்று முறைக்கு மேல் கண்டுபிடிக்கப்பட்டு இந்நிகழ்வு தற்செயல் அல்லாது திட்டமிட்டு நடந்திருப்பின் வாகன ஒப்பந்தம் ரத்து செய்யப்படும் .

ஆ) மேற்குறிப்பிட்டுள்ள முறைகேடுகளில் ஈடுபட்ட ஓட்டுனர் மற்றும் கிளீனரை எந்த சூழ்நிலையிலும் ஒன்றிய வளாகத்தில் நுழைய அனுமதிக்க இயலாது . வாகனத்தை இயக்க தேவையான மாற்று ஓட்டுனரை ஒப்பந்ததாரர் உடனடியாக ஏற்பாடு செய்ய வேண்டும் .

40. ஒப்பந்த பணி ஆணை வழங்கும்போது இணைக்கப்பட்டுள்ள இணைப்பில் கண்டுள்ள கால நிர்ணயத்தின் அடிப்படையிலும் முகவர்களின் வரிசை அடிப்படையிலும் பால் விநியோகம் செய்யப்பட வேண்டும். இதில் ஏதேனும் காலதாமதம் ஏற்பட்டு முகவர்களிடமிருந்து புகார்கள் வரும்பட்சத்தில் ஒப்பந்ததாரர் மீது நடவடிக்கை எடுப்பதுடன் ரூ.1,000/- அபராதம் விதிக்கப்பட்டு வாடகை பில்லில் பிடித்தம் செய்யப்படும்.

41. வாகனத்தின் அனைத்து சான்றுகளும், டிரிப் சீட்டு, ஓட்டுநர் உரிமம் ஒன்றியத்திலிருந்து வழங்கப்பட்ட பணி ஆணை, ஒன்றியத்திலிருந்து ஓட்டுநர், கிளினர்களுக்கு வழங்கப்பட்ட அடையாள அட்டையை வாகனத்தில் எப்போதும் வைத்திருக்க வேண்டும். தேவைப்படும்போது ஒன்றிய அலுவலர்கள் மற்றும் அரசு அலுவலர்களின் ஆய்வுக்கு காண்பிக்க வேண்டும். தவறும்பட்சத்தில் ரூ.1,000/- அபராதம் விதிக்கப்பட்டு வாடகை பில்லில் பிடித்தம் செய்யப்படும்.

டெண்டர்தாரர் கையொப்பம்

42. பால் விநியோக வாகனத்திற்கென்றே தனி கைப்பேசி இணைப்பு அவசியம் வைத்திருக்க வேண்டும். ஒன்றிய அலுவலர்கள், முகவர்கள் அழைக்கும்பொழுது தவறாமல் பதிலளிக்க வேண்டும். தவறும் பட்சத்தில் ரூ.1000/- அபராதம் விதிக்கப்பட்டு வாடகை பில்லில் பிடித்தம் செய்யப்படும்.
43. இவ்வலுவலகத்தில் இருந்து நிர்ணயம் செய்யப்படும் வழித்தடத்தில் கொடுக்கப்பட்டுள்ள கால அட்டவணைப்படி பால் விநியோகம் செய்ய வேண்டும். காலதாமதமாக பால் விநியோகம் செய்தால் நாள் ஒன்றுக்கு ரூ.1,000/- அபராதம் விதிக்கப்படும்.
44. ஒப்பந்ததாரர் *பால் பண்ணையில்* உற்பத்தி செய்யப்படும் பால் பாக்கெட்டுகளை உடனுக்குடன் அடுக்கி வைக்க ஏதுவாக ஒன்றியம் நிர்ணயம் செய்யும் நேரத்திற்குள் காலி பால்டப்புகளை ஒன்றியத்தில் ஒப்படைக்கவேண்டும். தவறும் பட்சத்தில் ரூ.1,000/- அபராதம் விதிக்கப்பட்டு வாடகை பில்லில் பிடித்தம் செய்யப்படும்.
45. கால தாமதமாக பால் விநியோகம் செய்யப்படுமேயானால், கெட்டுப்போன பாலின் கிரயத்தொகை மற்றும் ஒப்படைக்காத பால், பால் உபபொருட்களுக்கான தொகை போன்றவற்றின் அன்றைய மொத்த சில்லரை விற்பனை விலையில் இரு மடங்கு அல்லது ரூ.2,000/- இவற்றில் எது அதிகமோ அந்தத் தொகையை அபராதமாக வசூலிக்கப்படும்.
46. ஒன்றியத்திலிருந்து அனுப்பப்படும் பட்டியல்கள், கடிதங்கள் போன்றவற்றை முகவர்களிடம் ஒப்படைப்பதும், அவர்கள் கொடுக்கும் சலான்கள் போன்றவற்றை பெற்று ஒன்றியத்தில் சேர்ப்பதும் ஒப்பந்ததாரரின் பொறுப்பு ஆகும். தேவையான அவசர காலங்களில் முகவர்களிடம் பணம் பெற்று ஒன்றியத்தில் ஒப்படைக்க வேண்டியது ஒப்பந்ததாரரின் கடமையாகும். இதனை சரிவர செய்யாவிடின் ரூ.1,000/- அபராதம் விதிக்கப்படும்.
47. **ஒப்பந்த காலத்தில் வாகனம் F.C. செய்வதற்காகவும் விபத்து மற்றும் பழுது நிவர்த்திக்காக ஆண்டுக்கு 15 நாட்கள் மட்டுமே மாற்று வாகனம் இயக்க அனுமதிக்கப்படும். மாற்று வாகனத்தை ஒப்பந்ததாரரே ஏற்பாடு செய்யவேண்டும். F.C.க்காக வண்டி அனுப்பப்படுவதற்கு, 10 நாட்களுக்கு முன்னர் பொதுமேலாளருக்கு எழுத்துப்பூர்வமாக தெரிவிக்க வேண்டும். 15 நாட்களுக்குள் ஒப்பந்த வாகனத்தை இயக்காவிடில் நாளொன்றுக்கு ரூ.500/- அபராதமாக வசூலிக்கப்படும். மாற்று வண்டியானது ஒப்பந்த வண்டியின் மாடல் மற்றும் கொள்ளளவிற்கு குறைவில்லாமல் Puff Insulated Vehicle வாகனமாக இருக்க வேண்டும்.**
48. ஒப்பந்ததாரர் ஒப்பந்தம் வழங்கப்பட்ட 15 தினங்களுக்குள் வாகனத்தின் FSSAI சான்றிதழ் நகலை ஒன்றியத்திடம் ஒப்படைக்க வேண்டும். மேலும் ஒப்பந்த வாகனத்தின் முன்புறத்தில் வரையறுக்கப்பட்ட அளவில் FSSAI சான்றிதழ் எண் பொறிக்கப்பட்டு இருக்க வேண்டும்.

டெண்டர்தாரர் கையொப்பம்

49. ஒப்பந்ததாரர் தங்கள் வாகனத்தில் பணிபுரியும் ஊழியர்களின் இ.எஸ்.ஐ (E.S.I), வருங்கால வைப்பு நிதி (EPF)செலுத்திய சலான்களை ஒவ்வொரு மாத பட்டியலுடன் அலுவலகத்தில் சமர்ப்பிக்க வேண்டும். பிரதி மாதம் **Second Fortnight** போக்குவரத்து பட்டியல்களோடு இணைத்து கொடுக்க வேண்டும். *அவ்வாறு சலான்களை சமர்பிக்கவில்லையெனில் போக்குவரத்து பட்டியல்களுக்கு உண்டான தொகை வழங்கப்படமாட்டாது*

50. பந்த் மற்றும் அவசர காலங்களில் இயக்கப்படும் மாற்று வண்டியானது தயாரிப்பு ஆண்டு 2010-க்கு குறைவில்லாத மாடல் உள்ள வாகனமாக இருக்க வேண்டும். மேலும் ஒப்பந்த வாகனத்தின் கொள்ளளவு மற்றும் தனிச்சிறப்பு (Specification) உள்ளதாக இருக்க வேண்டும். தவறும் பட்சத்தில் வாகன மாடல் குறைவுக்கு அபராதமாக நாளொன்றுக்கு ரூ.500/-ம், கொள்ளளவு குறைவாக இருப்பின் அதற்கு அபராதமாக நாளொன்றுக்கு ரூ.500/-ம் என தனித்தனியாக வசூலிக்கப்படும்.

51. ஓட்டுநர்கள் பால் மற்றும் பால் பொருட்களை முகவர்களிடம் ஒப்படைக்கும்போது சுமுகமான உறவு வைத்திருக்க வேண்டும். முகவர்கள் இது தொடர்பாக புகார் ஏதும் தெரிவித்தால் கடுமையான நடவடிக்கை எடுப்பதுடன் ரூ.1,000/- அபராதம் விதிக்கப்படும்.

52. ஒப்பந்ததாரர் பால் மற்றும் பால் பொருட்களுக்கான அனுமதிச் சீட்டு (Gate Pass) பெற்று வெளியில் சென்ற பிறகு முகவர்களுக்கு பொருட்களை ஒப்படைக்கவில்லை என தெரியவந்தால் பொருளுக்கான தொகையின் மூன்று மடங்கு அல்லது ரூ.2,000/- இதில் எது அதிகமோ அதனை அபராதமாக விதித்து வாடகைப் பட்டியலில் பிடித்தம் செய்யப்படும்.

53. ஒன்றியத்தின் சார்பில் நடத்தப்படும் முகவர் குறை தீர்க்கும் நாள் கூட்டத்தில் சம்பந்தப்பட்ட வழித்தட ஒப்பந்ததாரர் மற்றும் ஓட்டுநர் தவறாது கலந்து கொள்வதுடன் முகவர்கள் தெரிவிக்கும் குறைகளை உடன் சரி செய்ய வேண்டும். கூட்டத்தில் கலந்து கொள்ளாமல் இருந்தாலோ குறைகளை சரிசெய்யாமல் இருந்தாலோ ரூ.1,000/- அபராதம் விதிக்கப்படும். மேலும், இது போன்ற தவறுகள் ஒப்பந்த காலத்தில் ஐந்து முறைக்கு மேல் தொடர்ந்தால் ஒப்பந்ததாரரின் ஒப்பந்தம் ரத்து செய்யப்படும்.

54. வாகனத்தில் தேவைப்பட்டியலைவிட அதிகமான பால் பாக்கெட்டுகள் ஏற்றி இருப்பதை ஒன்றிய அலுவலர்கள்/பாதுகாவலர்களால் கண்டுபிடிக்கப்பட்டால் பாலுக்கான தொகை மற்றும் அபராதமாக ரூ.20,000/- வசூலிக்கப்படுவதுடன் இதற்கு சம்பந்தப்பட்ட ஓட்டுநர், கிளினரை எந்த சூழ்நிலையிலும் ஒன்றிய வளாகத்தில் நுழைய அனுமதிக்க இயலாது. வாகனத்தை இயக்க தேவையான மாற்று ஓட்டுநரை மற்றும் உதவியாளரை ஒப்பந்ததாரர் உடனடியாக ஏற்பாடு செய்ய வேண்டும். மேலும், இது போன்ற தவறுகள் ஒப்பந்த காலத்தில் மூன்று முறைக்கு மேல் தொடர்ந்தால் ஒப்பந்ததாரரின் ஒப்பந்தம் ரத்து செய்யப்படுவதுடன் ஒன்றியத்தின் அனைத்து சரத்துகளின்படி ஒப்பந்ததாரர் பொறுப்பேற்க வேண்டும்.

டெண்டர்தாரர் கையொப்பம்

55. **வாகன ஓட்டுநரால் பால் மற்றும் பால் பொருட்கள் விநியோகிப்பதில் காலதாமதம் ஏற்பட்டு முகவர்களால் திரும்ப அனுப்பப்படும்போது, அதனால் ஏற்படும் இழப்புக்கு ஒப்பந்ததாரரே முழுப்பொறுப்பாவார்.**

56. இந்த ஒப்பந்தம், ஒன்றியத்தின் பால் விநியோக வண்டிகளின் நிலைமை திருப்திகரமாக இல்லாது இருப்பின் அல்லது பால் விநியோகம் செய்யும் வண்டிகள் தேவையில்லை எனக் கருதும் போது ஒரு மாத கால நோட்டீஸ் கொடுத்து ஒப்பந்தம் ரத்து செய்யப்படும்.

57. *ஒப்பந்தம் செய்யப்பட்ட வாகனத்திற்கு ஒன்றிய செலவிலேயே* GPS *கருவி பொருத்தி பராமரிக்கப்படும் அவ்வாறு பொருத்தப்பட்ட கருவிக்கு சேதாரம் ஏற்பட்டால் அதற்குண்டான இரட்டிப்பு தொகை ஒவ்வொரு முறையும் ஒப்பந்ததாரர் போக்குவரத்து பட்டியலில் பிடித்தம் செய்யப்படும் மூன்று முறைக்கு மேல் சேதாரம் ஏற்படும்பட்சத்தில் உடனடியாக எந்த வித முன்னறிவிப்புமின்றி ஒப்பந்தம் ரத்து செய்யப்படுவதுடன் ஒப்பந்ததாரர் எந்தவித டெண்டரிலும் கலந்துகொள்ளாவண்ணம் கருப்பு பட்டியலில் வைக்கப்படுவர்.*

58. அரசு அறிவிக்கும் வரிதொடர்பான நிபந்தனைகளுக்கு உட்பட்டே தங்களின் வாடகை பட்டியலுக்கான தொகை வழங்கப்படும்.

59. மேற்கண்ட விதிமுறைகளுக்கு அப்பாற்பட்ட எல்லாவித நிகழ்ச்சிகளுக்கும் ஒன்றிய பொதுமேலாளர் அவர்களின் முடிவே இறுதியானதாகும். ஒப்பந்ததாரர் அவற்றிற்கு கட்டுப்பட்டு செயல்பட வேண்டும்.

60. ஒன்றியம் அவ்வப்போது விதிக்கும் நிபந்தனைகளுக்கும், சட்ட திட்டங்களுக்கும் ஒப்பந்ததாரர் கட்டுபட்டவராவார். ஒன்றியத்திற்கும் ஒப்பந்ததாரருக்கும் ஏற்படும் கருத்து வேறுபாடுகளை துணைப்பதிவாளர் (பால்வளம்), *வேலூர்* அவர்களின் வழக்கு மன்றத்தின் மூலம் மட்டுமே தீர்த்துக் கொள்ளப்பட வேண்டும்.

61. எந்தவொரு ஒப்பந்த நிபந்தனைகளையும் சேர்க்கவோ, நீக்கவோ, ரத்து செய்யவோ, மாற்றம் செய்யவோ பொதுமேலாளர் அவர்களுக்கு முழு அதிகாரம் உண்டு.

டெண்டர்தாரர் கையொப்பம்

புதியது - தூயது - சுகாதாரமானது

வேலூர் மாவட்ட கூட்டுறவு பால் உற்பத்தியாளர்கள் ஒன்றியம் லிட்.,
எண்-142, ஆற்காடு சாலை, சத்துவாச்சாரி, வேலூர்-632009

பால் விநியோக வழித்தடத்திற்கு
வாடகைக்கு PUF INSULATED வாகனத்தை
வழங்குதல் (MILK DISTRIBUTION ROUTE PUF
INSULATED VEHICLE)
வணிக விலைப்புள்ளி – B (Commercial Bid)

டெண்டர் நாள் : **10.06.2022**

# SCHEDULE “B” (வணிக விலைப்புள்ளி)

## வேலூர் மாவட்ட கூட்டுறவு பால் உற்பத்தியாளர்கள் ஒன்றியம் லிட்.,

## எண்.142, ஆற்காடு சாலை, சத்துவாச்சாரி, வேலூர்- 632009

வேலூர் மாவட்ட கூட்டுறவு பால் உற்பத்தியாளர்கள் ஒன்றியத்தில் வேலூர் பால்பண்ணையிலிருந்து சென்னைக்கு ஒப்பந்தம் வழங்கும் நாள் முதல் ஓராண்டிற்கு தேவையான நாட்களில் பப்டு **Puff Insulated Vehicle** வாகனம் மூலம் பால் விநியோகம் செய்வதற்கான புதிய ஒப்பந்தப்புள்ளி படிவம்.

## வணிக விலைப்புள்ளிபடிவம் (COMMERCIAL BID)

| | | |
|---|---|---|
| 01 | பால் விநியோக வழித்தடத்தின் பெயர் | *வேலூர்* to சென்னை பால் விநியோக வழித்தடம் |
| 02 | விண்ணப்பதாரரின் பெயர் மற்றும் நிரந்தர முகவரி | |
| 03 | அஞ்சல் முகவரி | |
| 04 | தொலைபேசி/செல்போன் எண் | |
| 05 | பப்டு (**Puff Insulated Vehicle**) வாகனத்தின் பதிவு எண் | |
| 06 | கோரும் ஒப்பந்தப்புள்ளி கிலோ மீட்டர் ஒன்றுக்கு பப்டு (**Puff Insulated Vehicle**) வாகனத்திற்கு (எண்ணாலும் எழுத்தாலும்) (அ) 10 மெ.டன்<br>(ஆ) 16 மெ.டன் | ரூ.<br><br>(ரூபாய் |

<u>குறிப்பு</u> : டெண்டர்தாரர் ஒரு கிலோ மீட்டருக்கான கட்டணத்தில் எண்ணால் மற்றும் எழுத்தால் குறிப்பிடும்போதுகட்டணத்தில் ஏதேனும் மாற்றம் இருந்தால்,இதில் எது குறைந்த கட்டணமோ அவையே இறுதியாக எடுத்துக்கொள்ளப்படும்

என்னால்/எங்களால் கொடுக்கப்பட்டுள்ள மேற்குறிப்பிட்ட விபரங்கள் யாவும் உண்மையானவை என உறுதி கூறுகின்றேன்/உறுதி கூறுகின்றோம்.

இடம் :
நாள் :

டெண்டர்தாரர் கையொப்பம்